சிவோஹம் பாராயணத் தொகுப்பு
சிவார்ப்பண மஞ்சரி - 003

சியாமலா தண்டகம் - தமிழ்

மொழி பெயர்ப்பு : ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தி அய்யர்.

அடியார்கள் அனைவரும் அம்பிகையின் அருள்பெற அர்ப்பணிப்பு
சிவோஹம் சிவார்ப்பணம் தொகுதி - 2025 /01/24 தை வெள்ளி

சியாமலா தண்டகம்

மொழி பெயர்ப்பு : ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தி அய்யர்.

(அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

பண்: முல்லைத்தீம்பானி ராகம்: மோகனம் தாளம்: ஆதி

மாணிக்யவீணா முபாலலயந்தீம் |
மதாலஸாம் மஞ்ஜுல வாக்விலாஸாம் |
மாஹேந்த்ர நீலத்யுதி கோமலாங்கீம்
மாதங்க கந்யாம் மநஸா ஸ்மராமி ‖ 1 ‖

நவமணி பதித்த யாழில் | நல்லிசை பயிலு வாளை
பவனமிக் கெழிலி னாளை | இனியநன் மொழியி னாளை
உவமையில் நீல வண்ணத் | தொளிர்மணி மேனி யாளைத்
தவமுனி மதங்கன் ஈன்ற | தநயையை அகத்தில் கொள்வாம்.

துர்புஜே சந்த்ர கலாவதம்ஸே
குசோந்நதே குங்கும ராகஸோணே |
புண்டரேக்ஷு பாஸாங்குச புஷ்பபாண
ஹஸ்தே நமஸ்தே ஜகதேகமாத: ‖ 2 ‖

நவிலுறு கரங்கள் நான்கும் | நளிர்மதி முடியும் செய்ய
குவிமுலை இரண்டும், தூய | குங்கும வண்ண மெய்யும்
சுவடுறு கரும்பு பாசாங் | குசமலர் துலங்குங் கைய
மவிர்புவிக் கொருவ ளேயா | மன்னைநின் னடிகள் போற்றி.

ஸ்ரீவேளுக்குடி சொற்பணம்

மாதா மரகதஷ்யாமா மாதங்கீ மதஸாலிநீ ।
கடாக்ஷயது கல்யாணி கதம்பவந வாஸிநீ ॥ 3 ॥

மரகத வண்ண மேனி । மங்கைநன் மதுவிற் சிந்தை
விரவினள் கடம்பம் கானத்து । உறைபவள் விரும்பிஎன் றும்,
பரவிய மங்க லஞ்செய் । பான்மையள் உலகம் ஈன்ற
கரவிலா வுளமா தங்கி । கடைக்கணித் தருள்க மாதே

ஜய மாதங்க தநயே ஜய நீலோத்பல த்யுதே ।
ஜய ஸங்கீத ரஸிகே ஜய லீலாஸுக ப்ரியே ! 1 4 1

மதங்கமா முனிவர் ஈன்ற । மதிமுகச் செல்வி வெல்க
இதங்கமழ் காவி வண்ணத்து । இன்னருள் வாரி வெல்க
பதங்கொள்இன் னிசையில் சிந்தை । பரவிய மங்கை வெல்க
விதங்கொளு மாடற் கிள்ளை । விழைவுறு கோதை வெல்க

சிவோஹம் சிவாயம்

தண்டகம் - அகவற்பா

பண்: முல்லைத்தீம்பானி ராகம்: மோகனம் தாளம்: ஆதி

அமுத வெண்டிரை யார்கலி சூழ்தரு
தமனி யப்பெருந் தண்மணித் தீவினில்
நளிர்செய் வில்வ வனத்தின் அனந்தலை
களித்தேன் முரலுங் கடம்ப வனத்துறை
விழிவுறு கழைத்தோள் விளங்கெழில் செல்வீ ! 01

புழைக்கை மாவுரிப் போர்வையன் றேவி
ஆதர வுடன்மகிழ்ந் தின்னிசை பயிலத்
தாதவிழ் கடம்பத் தார்புனை கோதை
நிதம்ப நெடுந்தலந் தைவர நீள்புவிக்கு
இதம்பயில் பனிவரை ஈன்றமென் கொடியே । 02

சிரமணிக் கதிர்க்குலஞ் செறிகதிர் பரப்பிக்
கருமுகில் அளகங் கவினுறச் செய்யும்
அவிர்மலர்க் கணைய னாடல்வில் லுறழும்
வாணுதற் கொடியின் வளம்பெறு மலரெனப்
பூணுநற் திலகம் பொலிவுறுந் திருவே ! 03

ஒளிதரு காதணித் தரளபந் திகளெனு
நளிர்மதிக் குலங்க ணன்னில வெறிக்கத்
தீட்டிய கபோலந் திகழ்மக ரிகையின்
கானக் கமழ்தர ஈறுந்தேன் முரலும்
கானமோடி யாழ்பயில் கானமும் பொருந்தி 04

சிவோஹம் சிவார்ப்பணம்

இன்னிசை அளிக்கும் இன்புடைக் தேவி
நனனர்யாழ் பயில நறுந்தொடை அசைவர
வானவர் சித்தர் வாழ்ந்திந் திருவே !
மானறுஞ் சுவைத்தேன் மகிற்ந்தினி தருந்தக்
காமரு கட்கடை யசையக் கவின்பெறு 05

தேமலர் நீலக் திகழ்செவிச் திருவே !
நிறையுல குயிர்களின் நினைப்பருள் கடலே !
அறைதரு சுவேதநீர் அரும்பிய வாணுதல்
நலந்தரும் எழிற்குலம் அனைய நாசிகையில்
கலந்தொளிர் அணியுடை மந்த்ரகா ரணியே ! 06

முல்லைமென் முறுவன் முகத்தினில் ஒளிர்தரு
நல்லதக் கோல நலங்கிளர் திருவே! |
தவளமென் முல்லைத் தந்தபந் திகளின்று
இவளொளி தவழுஞ் செவ்விதழ் உடையாய் !
எழிலுறு தனியாழ் இலங்கெழில் கரத்தாய் ! 07

கழிபெரும் பருவக் கலைமதி யெழுநாள்
வரையெழில் பயொததி பொங்கித் துதம்பத்
திரைகடல் அளித்தவெண் சங்குறழ் களத்தாய்
கதிர்விடு மணிதிகழ் காசறும் அவயவி
துதிபெறு மங்கலத் தொல்லுரு வினளே ! 08

ஏகாம்பர் இவர்ப்பணம்

நவமணி வங்கியின் நலம்பெறு கதிர்த்திரள்
இவர்தடந் தோளுடை இருந்தவர் பேறெ !
திசைபரந் தொளிர்மணிக் கங்கணந் தரித்துப்
பசையறு மனத்தினர் பழிச்சுநற் பெருமையாய் !
நாண்மலர் தாமரை நாணுறும் கரத்தினாய் ! 09

மாண்பெறு யெளவனப் பருவமெல் லியலே !
ஆரெழில் குண்டலத் துணையணிந் தவளே !
தாரகா கணமெனத் தண்கதிர் விரிக்கும்
தளரமென் றொடைபுரள் தனிப்பெருந் தனித்துணை
பரிப்பமுன் வளைந்தொளிர் பைங்கொடி. இடையில் 10

திருக்கிளர் மடிப்புக டெரிதருந் திருவே !
பொன்னருங் கலசப் பூந்தனஞ் சுமந்து
மின்னொளிர் மேனி வளைந்துமுன் கழலிணை
மன்னுமூ வுலகும் வணங்கவீற் றிருப்பாய்.
துன்னெழில் வட்டச் சுழியெனு மடுக்கரை 11

பாசியொத் தொளிரும் உரோமநல் லணியாய் !
காசறு மழலைக் கனிமொழிச் செல்வீ !
இன்னிசை அரைஞாண் நிருங்கழை வில்லி
தன்னெழில் நாணு நாணுறச் செய்யா
வியலொடு பொற்கலை யிலங்குமெல் லியலே ! 12

ஸ்ரீ லோகசிவார்ப்பணம்

உயர்பெரும் பதும ராகமே கலையின்
எழிலுறு நிதம்பத் தலம்பொலன் வரைபைப்
பழிக்குமா மதிநளிர் பூசியபூங் கொடியே !
பருவரைப் பலாசப் பனிமலர்ப் பூந்துகில்
மருவெழிற் குறங்குவான் மதகரிச் சிந்தூரப் 13

புழக்கையை வென்றிடும் பச்சிலை மேனியாய் !
தழைமலர்ப் பகழியன் றாங்கரு மாவமும்
இணையிலா தொளிரும் இரும்புறக் கால்களின்
அணிகெழு நடைபயில் அரும்புகழ்ச் செல்வீ |
வணங்குமெண் திசைக்கா வலர்மனை வியரின் 14

மணங்கமழ் அளகம் அருகென மயங்கிப்
பனிமதி நிகர்க்கும் பதவுகிர்க் கலைமுயல்
நனிகறித் திடுமுபர் கனித்திரு வினளே !
வானவர் இயக்கர் பூதர் பிரமா
தானவா நிருருதி வளித்தீ யாதி 15

துலங்குமற் றிவர்மணி முடிக்குலந் தோய்தர
நலங்கிளர் சேவடி மணிநிறத் தோடுகலந்(து)
ஒளிமயக் குறமெழில் உம்பர் நாயகியே !
நளிர்நவ மணித்தவி சிருந்துவெண் சங்கம்
பதுமநன் னிதியுடைப் பரவருந் தேவி ! 16

விதுமுகத் துர்க்கை வடுகெழிற் கேத்திர
பாலனோடு உறையும் பான்மையா ரணங்கே !
வாமதே வியொடேழில் வனிதையர் வலம்வரத்
தாமரை மலருறை தையலோ டெண்பெருங்
காமரு சத்திகள் கழலிணை வருடத் 17

தேமொழிப் பைரவித் தேவியர் வாழ்த்த
மனங்கிளர் வேனிலும் மாண்புறும் இன்பமும்
புரிதரு நின்கழல் புவிமிசை வெல்க
உரியமெய் அன்பர்க்கு உறுபுகழ் அளித்து
மறையினுட் பொருளாய் மாதவர் சிந்தையாய் 18

அறைதரும் உலகெலாம் அமைந்தொளிர் பவளே !
வேய்ங்குழல் பயிலும் விரிமலர்க் கண்ணன்
பூங்கம லப்பதம் போற்றிடும் திறத்தாய் !
விஞ்சையர் கவிதையின் வளம்பெறு பவளே !
பஞ்சடித் தெய்வ மடந்தையர் பரவி 19

விருப்புறு பயன்பெறு விறல்கழல் இனளே !
இருமலர்க் கரங்களால் இன்கவி அணைத்தும்
உரைதிடு மாற்றலும் ஒளிர்தரு வண்ணமும்
விரைத்தட வரிகளும் விருப்புறும் எழிலும்
பாசிலை நிறத்துப் பருச்சிறை இரண்டு 20

மாசறு பலாச மலர்நிறத் தலகு
மிலங்கெழிற் கிள்ளையை யெடுத்தரு மாடல்
நலம்பெறப் புரியவும்; கவிலுமற் றிருகரம்
படிகமா லிகையும் பல்கலைத் திரளின்
முடிவறு ஞான முழங்குபுத் தகமும் 21

தரித்தவ ளென்றுனைத் தன்னகத் துன்னி
வெறித்தடங் கமல மெல்லடி பணிவோர்
நாவினில் இருந்து நலம்பெறு கவிக்கடல்
பூவுல கிதனுள் பொலிவுறச் செய்வாய் !
ஆணும் பெண்ணும் ஆயதோர் உருவெனப் 22

பேணிநின் கழலிணை போற்றிடும் பெற்றியர்
செழுந்திரு வெண்மருஞ் சேர்ந்திடப் புவிமிசை
தொழுந்தகை யினராய்த் துலங்குவ ரன்றே !
மதியணி வேணியு நீலநன் மணியின்
அதிபெறு மேனிபுந் தொழுதுளம் மகிழ்பவர் 23

பெறுவதற் கினியொரு பேறுமிங் குளதோ ?
மறுவறு நின்கழல் போற்றிடும் மாண்பினர்க்(கு)
கறைதரு திரைக்கடல் ஆடலம் பொய்கையா |
மிருந்தருச் செறிவன மின்மலர்ச் சோலையாம்
பெருந்திருப் புவியெலாம் பிறங்கெழில் இருக்கையாம் | 24

யந்திர உருவும் நீ ! மந்திர உருவும் நீ !
தந்திர உருவும் நீ ! சர்வமுத் திரையும் நீ !
சக்திகள் அனைத்தும் நீ ! சக்கரம் அனைத்தும் நீ !
வித்தக வண்ணம் நீ ! விளம்பிய அனைத்தும் நீ !

உலகில்பல் உயிர்க்கும் அன்னையே ! தமியனை
நிலைபெற அளித்திநின்கழல் சரணே ! 25

சுபம் !